உ

கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௪. } ஸ்ரீதாது ௵ புரட்டாசி ௴. { பகுதி ௬.

எறும்புகள்.

(135-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆகாரம்:—எறும்புகளிலும் சாகபக்ஷிணிகளும் மாமிச பக்ஷிணிகளுமுண்டு. ஆயினும் அவற்றிற் பெரும்பான்மையன சகல வஸ்துக்களையும் தின்று பிழைக்கும். உள்ளபடியே காக்கையைப் போல எறும்புக்கு ஏதும் தள்ளுபடி இல்லை உஷ்ணப் பிரதேசங்களில் பிணந் தின்னிப் பறவைகளும் மிருகங்களும் தின்ற மிச்சமெல்லாம் எறும்புகளின் உணவே என்றால் அதிகம் சொல்வானேன்? ஆயினும் எவ்வகை எறும்பிற்கும் தித்திப்பில் தான் அதிகப் பிரீதி. இனிய பண்டம் எவ்விடத்திருந்தாலும் எறும்புகள் அவ்வ இருக்குமிடத்தை வாசனையாலறிந்து விடும். சர்க்கரையை மேஜைமேல் வைத்து, மேஜைக் கால்களை நீருள்ள பாத்திரங்களில் அமிழ்த்தி வைத்தாலும், எறும்புகள் மோப்பத்தால் அதனை இருப்பிடம் அறிந்து, சுவரின் வழியாக உத்திரத்திற் கேறி அங்கிருந்து சர்க்கரை இருக்கும் இடத்திற்கு நேரே தொப்பென்று விழும். செடிகளை இவை செய்யும் நாசம் பயிரிடுவோர் நன்கறிவர். நிறக.

தேனையே சேகரித்துத் தினந்தோறும் உண்ணும் எறும்புகள் அமெரிக்காவில் உள்ள மெக்ஸிகோவில் ஏராளமாக இருக்கின்றன. இவ்வெறும் பினத்தைப் பிற வெறும்பினங்கள் தேடிப் பிடித்து அவற்றின் மூலமாகத் தேன் பெற்று வாழ்கின்றன.

வேறு சில எறும்புகள் பற்பல வர்ணமும் வடிவமும் அமைந்த ஒரு வகை அறுகாற் சிறு ஜந்துக்களை, நாம் பசுக்களை உபயோகிப்பது போல் உபயோகிக்கின்றன. அவற்றின் உடலிலிருந்து வரும் இனிய துளிகளை எறும்புகள் நக்கிக்குடித்துத் தம் பசியைத் தீர்த்துக்கொள்ளும். இவ் வெறும்புப் பசுக்கள் பெரும்பாலும் முள் நிறைந்த ரோஜாச் செடியில் வசிப்பன ஆகும்; அப் பசுக்களை எறும்புகள் தம்மினும் அதிக கவனத்துடன் பொன் போற்போற்றி வளர்க்குமாம். இப்பசுக்களை அவை அவற்றிற் கேற்ற ஆகாரங்கள் கிடைக்கு மிடந்தேடி இட்டுச் சென்று அவைகளைக் கொழுக்க வைத்து உணவு பெறும். மஞ்சள்நிற எறும்பே இப்பசுக்களைப் பெரும்பாலும் வளர்த்துப் பல்குவிப்பன.

சில் வகை எறும்புகள் தாமே ஒரு வகைப் புல்லரிசியைப் பயிரிட்டுக் களை பிடுங்கி எருவிட்டு அவற்றை வளர்த்துத் தானியம் பெற்று அவற்றைத் தின்று வளர்கின்றன என்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.

எறும்பின் பழக்க வழக்கங்களும் இயற்கை விசேஷங்களும்:— எறும்புகளுக்குள் ஒற்றுமை மிகுதி. ஒரு கூட்டத் தெறும்புகளில் ஒன்று களைத்துப்போனால் மற்றொன்று அதனைத் தன் முதுகில் எடுத்துச் சென்று வளை சேர்ப்பிக்கும். ஆகாரம் தேடச் சக்தியற்றவைகட்குச் சக்தி யுள்ளவை ஆகாரம் தேடித் தரும், தனித்திழுத்துச் செல்ல முடியாத பொருளகளைப் பல ஒருங்கு சேர்ந்து விரைவில் அதி சுறுசுறுப் புடன் இழுத்துச் செல்லும். எறும்பின் பருமன் என்ன? அதன் பலமென்ன? ஐந்து வயதுக் குழந்தை யானைக் குட்டியைத் தூக்குவதைக் காட்டிலும் எறும்பு வெட்டுக்கிளியை இழுத்துச் செல்வது அதிக அதிசயமே யன்றோ?

எறும்பின் பேராற்றலும் முயற்சியும் ஒரு புறமிருக்கட்டும். அதன் நிதான யோசனையை என்னென்பேம்! அது மாரி காலத்திற்கு வேண்டிய வற்றைக் கோடை காலத்திலேயே தேடி வைத்துக் கொண்டு விடுகிறது. மாரிகாலத்தில் சாப்பிடும் நேரந் தவிர மற்ற வேளைகளில் அது படுத்துறங்குமாம். நிற்க.

மனிதர் தம் எதிரிகள் மீது படையெடுத்துச் சென்று தம்மி லும் மெலியாரை அடிமையாக்கித் திரும்புதல் போல, சில சிவப் பெறும்புகள் கார் எறும்புகளை எதிர்த்துப் பற்றி அவற்றின் குஞ்சு குழந்தைகளுடன் அவற்றைச் சிறை செய்து தம்மிருப்பிடம் கொண்டு சென்று அடிமைகளாக்கி வேலை வாங்குகின்றன. இக் காரெறும்புகள் இல்லாவிடில் அச்சிவப்பெறும்புகள் உயிர் வாழவே முடியாது. எஜமான விசுவாச மிகுந்த இக்காரெறும்புகளையே தமக்காகக் கூடு கட்டவும், ஆகாரம் தேடவும், தமக்கும் தம் குழந் தைகளுக்கும் வாயில் ஆகாரம் ஊட்டவும், இடிந்த தம் புற்றைப் பழுது பார்க்கவும் சிவப்பெறும்புகள் செய்கின்றன. சிவப்பெறும் புகளுக்கு முற் கூறிய தொழில் ஏதும் செய்யத்தெரியாது. இவை பரீக்ஷித்தறிந்த உண்மையாகும்.

மழை பெய்து வெள்ளம் வரும் காலத்தில் இவை ஒருங்கு திரண்டு தம்மைப் பந்து போலாக்கிக் கொள்ளும். (இவ்வெறும்புப் பந்தில் உள்ளிருப்பன சின்ன எறும்புகளும் குஞ்சுகள் முதலியன வுமாகும். சுற்றிலும் இருப்பன வயதான பெருத்த எறும்புகளே) இப்பந்து மிதந்து நீரோட்டத்தின் வழியே சென்று எங்கேனும் ஒதுக்கப்பட்டவுடன் அங்குத்தங்கி சந்ததி அபிவிர்த்தி செய்து வாழ்ந்திருக்கும்.

எறும்பினத்தில் மகா கொடியது கட்டெறும்பினத்தைச் சேர் ந்ததும் ஆபிரிக்காவில் காணப்படுவதுமான "வெருட்டு எறும்புகள்" (Driver Ants) என்ற ஒருவகை எறும்புகளே. இவற்றிற்குக் கண்ணே தெரியாது. இவற்றின் கொடுக்குகள் பழுக்கக் காய்ச்சிய ஊசிகள் போலிருக்கும். இவை படை யெடுத்துவந்து விடுமாயின் வீட்டிலுள்ளோர் வீட்டைப் போட்டது போட்டபடியே யோட்டு விட்டு எங்கேனும் ஓடிப்போய்விட வேண்டியது தான். தீயினின் றும் தப்பவும் இவற்றிற்குப் பலவகை உபாயங்கள் தெரியும். இவற்றின் வரவையறிந்தால் யானை, புலி, சிங்கமும் அஞ்சி நடு நடு ங்கி ஓடும்.

சண்டை:—வேறு வேறு வளைகளில் இருக்கும் எறும்புகள் பரஸ்பரம், ஆசாரம், பசு, அடிமை முதலியவற்றை அபகரித்துக்

கொள்ளுமாறு அடிக்கடி சண்டைபோடும். அச்சண்டையில் அவை பெரும்பாலும சின்னுபின்னமாகச சிதையுண்டு செத்தாலும் சாகுமே யன்றிப் புறங்காட்டி ஓடாவாம். தோற்றோடுவன மகா பயங்கொள்ளிகளாகிய கறுப்பெறும்புகளேயாம். இவைகளும் இவற்றின் குடும்பமும் தான் செந்நிற எறும்புகளால் கைதி செய்யப் பட்டு அடிமையாக்கப்பட்டு அவைகளால் அதிக பக்ஷத்துடன் வளர்க்கப்படுவனவாகும். எறும்புகளும் சிற்சில விதிகளை யேற்படுத்திக் கொண்டு தர்மயுத்தமே செய்கின்றனவாம்! கார் எறும்புகளிலும் சில வகை அதி தைரியத்துடன் தம் எதிரியை எதிர்த்துப் போர் புரிவதுண்டு. சண்டை முடிந்த சற்று நேரத்திற்கெல்லாம் புற் றண்டை கால் வேறு, கைவேறு, தலைவேறு, உடல்வேறாகக் கணக் கற்ற எறும்புகளைக் காணலாம்.

உபயோகங்கள்:—(1) எறும்பின் முட்டை, புழு, பெரிய எறும்பு முதலியன ஓந்தி, கோழி, பல்லி, வான்கோழி, மறுபுச் சிம்மம் முதலிய வற்றிற்குச் சிறந்த ஆகாரமாகும்.

(2) அழுகி நாற்றமெடுத்த பிராணிகளைத் தின்று எறும்புகள் சுகாதாரத்தை நன்கு பாதுகாக்குகின்றன.

(3) இங்கிலாந்து முதலிய தேசங்களிலும், பவளம், சங்கு, மூத்து, ஸ்பஞ்சு முதலியன சுத்தம் செய்யும் இடங்களிலும் எறு ம்பு செய்யும் வேலையை விசேஷமாகக் காணலாம். எந்தப் பிராணி யின் எலும்புக்கூட்டையாவது பெறவேண்டின் இறந்த அப்பிராணி யை எறும்புப்புற்றண்டை வைத்துவிட்டுச் சின்னாட்களுக்குப் பின் வந்து பார்த்தால் சதைப்பற்று அணுவேனுமின்றி எறும்புகள் அவற்றை அறவே அரித்துத் தின்றிருக்கக் காணலாம்.

(4) "தேன் எறும்புகள்" என்ற ஒருவகை எறும்புகளின் சரீ ரத்தினின்று தேனும், அத்தேனால் சாராயமும் உணவும் பெற லாகும்.

(5) அராபியர் நீர் அகப்படாத நெடுஞ்சுரத்தில் தாகத்தால் வருந்துங்கால் ஒட்டகத்தினின்றும் தண்ணீர் பெற்றுப் பிழைப்பது போல, பரம ஏழைகளும் "ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்க விறகும் கார்தட்டிய பஞ்சகாலத்தில்" எறும்பு வளையைத் தோண்டி அது பிற்காலத்திற்கென்று சேகரித்து வைத் திருக்கும் தானியங்களையும் கொள்ளையடித்துப் பிழைப்பர்!

(இன்னும் வரும்.) பத்திராதிபர்.

கல்வி.

(௬௯௬-ம் பக்கத் தொடர்ச்சி.)

சிலர் "பணமிருந்தால் படிப்புத் தானேவரும். ஆதலின் பணம் ஒன்றிருந்தால் போதும்" என்கின்றார்கள். பாருங்கள்! அந்தப் படிப்புக்கும் பணத்துக்குமுள்ள ஏற்றத் தாழ்வைப் பற்றி ஆன்றோர்,

"வளநிதி படைத்தோ மென்றும் வடிவவில் லுடையோ மென்றும்
அளவில்சே யின்றோ மென்றும் அனுபவத் தமைந்தோ மென்றும்
இளமையிற் சிறந்தோ மென்று மெழினல முடையோ மென்றும்
உளமகிழ் கூர்வர் சற்று முண்மைநூ லுணர்ச்சி யில்லார்."

என்றும் "கைப்பொரு டன்னின் மெய்ப்பொருள் கல்வி" என்றும் கூறியுள்ளார்கள். உற்றுநோக்கிப் பார்க்கின், செல்வப் பொருளானது, கள்வராலும் அரசராலும் தாயத்தாராலும் வலியராலும் காலத்துக்கேற்றவாறு கவர்தலுக் கெளிதாயுள்ளது. கல்விப்பொருளோ ஒருவரால் வஞ்சிக்கத்தக்க தன்று. கொடுக்கவு மெடுக்கவும் குறைவதன்று. செல்வப்பொருளோ கொடுக்கக் குறையும். கல்விப்பொருள் வளரும். செல்வ மதிப்பிடத்தக்கது. கல்வி மதிப்பிலடங்காதது. செல்வம் வெள்ளம் அக்கினிகளால் அழிவு அடையும்: கல்விக் கெதனுலு மழிவில்லை. செல்வப்பொருள் வாய்க்கின் காத்த லளித்தல் பெருக்க லனைத்தாலுந் துன்பம். அன்றியும் சமையம் வாய்ப்புழி உயிருக்கு ஆனி பயக்கவும் கூடும்; கல்வியோ, பெற்றோர்க்கும் பிறர்க்கு மின்பம் பயக்கும். அன்றியும் இம்மையிற் கீர்த்தியு மறுமையில் மோட்சமு மடைதற் கேதுவாயு முள்ளது. பொருளால், உடையவர்க்குச் சிறிது நட்பும் பெரிது பகையுமே கிட்டுமெனலாம்; கல்வியுடையார்க்கோ உலகிலுள்ளா ரனைவரு நட்பும் அன்பு முடையவராவ தன்றி சென்ற விடமெல்லாம் சிறப்புமுண்டாகும்.

"களர்நிலத்துப் பிறந்த வுப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோ ராயினுங் கற்றுணர்ந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்."

"கற்றோர்க்கு கல்வியழகே யழகு." என்றும் "தோழனுவது துலங்கிய கல்வி" என்றும் சொல்லியிருப்பது காண்க.

"கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை."—இது ஆன்றோர் முதுமொழி யாதலின் ஒருவர்க்கு செல்வப் பொருளினுங் கல்விப் பொருளே சிறப்புடைத் தென்பது குன்றின்மேலிட்ட தீபம்போல் கொள்ளக் கிடக்கின்றது.

ஆகவே, அதைக் கற்பதில் ஐயந்திரிபறக் கற்றல்வேண்டும். அதிலும் ஒரு நாள் ஊக்கமாகவும் மற்மொரு நாள் சோம்பலாகவு மிருத்தல்கூடாது. எக்காலத்தும ஒரே ரீதியாக இடைவிடாது கற்றல்வேண்டும். இல்லையேல் "நூறு நாள் கற்றது ஆறு நாள்விடத்தீரும்" என்றதாய்முடியும். ஆதலின், "பாடமேறினும் எடு கை விடேல்" "தொட்டனைத் தூறு மணற்கேணி மாந் தர்க்கு, கற்றனைத் தூறு மறிவு" என்றபடி, விடாமுயற்சியோடு முற்றக் கற்க வேண்டும். மேலும் தாம் கற்றேமென்று கர்வங்கொள்ளுதல் கூடாது. 'தம்மினுங் கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றவெலா மெற்றே இவர்க்கு நாம் என்று.' அன்றியும் கற்றதைக் காப்பாற்றாது புதிது புதிதாய்க் கற்க வெண்ணுவது தவறு.

"வருந்தித்தாம் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் றொடங்கல்—கருந்தனங்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல்."

மேற்கூறியவாறு ஒருவன் றனக்கு வேண்டிய அளவு கருவி நூல்களைக் கற்றுத்தெளிந்த பின்னர் தன் ஆன்மாவுக்கு வேண்டிய ஞான நூல்களை ஞானாசிரியரையடைந்து கற்றுத் தெளிதல்வேண்டும். சுய பாஷையுடன் பூகோளம் வானசாஸ்திரங்களை எளிதிலறிதற்கு ஏதுவாய் அமைந்து கிடக்கும் நூல்கள் நமது அரச பாஷையிலுண்மையால், இங்கிலீஷ் முக்கியமாய்க் கற்கவேண்டுமென்றே சொல்லலாம். அன்றியும், ஒருவனுக்கு ஒருபாஷை தெரிவதிலு மிருபாஷை தெரிந்திருப்பது இரு கண்ணும் இரு கையுமிருத்தலை ஒக்குமாதலின் பிறபாஷையுங் கற்ற லவசியமே.

இவ்வாறே கற்றவொருவன் கற்றதற்கேற்ப நிற்றல் அவசியம். அத்தோடு சொல் வன்மையுடையவனாகவு மிருத்தல்வேண்டும்.

"எத்துணைய வாயினுங் கல்வி இடமறிந்து
உய்த்துணர் வில்லெனி னில்லாகு—மூய்த்துணர்ந்துஞ்
சொல்வன்மை யின்றெனி னென்னா மஃதுண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து"

ஆகவே கல்வியே செல்வத்துளெல்லாந் தலையாயது. இவ்வாறே தருமத்திலெல்லாம் கல்விச்சாலை தாபிப்பதே உயர்ந்ததாகு மெனலாம். என்? ஒருவர் சத்திரம்வைத்து ஏழைகளுக் கன்னமிட்டாராயின் அது உண்டானுக்கு அது சமையம் பசிப்பிணியை மாற்றுவதேயன்றி எஞ்சிய நாளைக்கும் ஏனைய பிறப்புக்கும் தொடர்ந்து வருவதில்லை. கல்வி கற்பிக்கிலோ அவன் கற்றலோடு ஏனையோருக்கு மீய அது குறைபாதே

நிறைவதன்றியு மேனைய பிறப்புக்குந் தொடர்ந்து வரும். "ஒருமைக்கட் டான்கற்ற கல்வி ஒருவற்கு, எழுமையு மேமாப் புடைத்து."

நமது பரமாசாரியரான சுந்தரமூர்த்தி சுவாமிகளும் கண்ணப்பநாயனரைக் கூறும்போது "கலை மலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்" என்றார். ஆகவே கல்வியை ஒருவன் இச்சென்மத்தே கற்றுவிட்டாற் பிற சென்மங்களிலும் அது தொடருமென்பது சரதமே யன்றோ? இன்னும் "தந்தை மகற்காற்று நன்றி அவையத்து,முந்தியிருப்பச் செயல்"மகன்றந்தைக்காற்று முதவி யிவன்றந்தை, யென்னோற்றான் கொல் லென்னுஞ் சொல்" கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு, மாடல்ல மற்றை யவை" "இருவிழிகள் வாண்முகத்தி லிருந்தாலும் வானிரவி எழுந்தா லன்றிக்,கருதுநிலப் பல்பொருளுங் காண்டலரி தாமுலகிற் கண்போல் யாரும், பெருகியசெல்வமுமறிவும் பெற்றாலு நூற்கேள்வி பெறுவார்க் கன்றித், திருவளர்புண்ணியபாவ மிம்மை மறு மையும்வீடுந் தெரியா வன்றே" எனப் பலநூல்களும் கூறுவதெல்லாம் நாமுய்தற்கன்றி வேறு கருதியன்று. ஆகவே சென்மமெடுத்த ஒவ்வொருவரும் கல்வி கற்றே தீரவேண்டுவதாகும்.

கல்வி கற்றற்கு ஆண் பெண் இருபாலரு முரிமையாளரே. ஆனால் சிலர் "ஆண்பிள்ளைகளனைவரும் கல்வி கற்கவேண்டியது முக்கியம். பெண்கள் கல்வி கற்கவேண்டுவ தனாவசிய" மென்ன நினைக்கின்றார்கள். ஆன்றோர் கருத்து அதுவன்று. இருபாலாரும் கற்றற் குரியாரென்பது கொண்டேயன்றோ

"குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்துள்
நல்லம்நா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு"—என்றார் ஆன்றோர்?

ஆதலின், பெண்களும் கல்வி கற்கவேண்டியது முக்கியமே. ஆனால் அவர்கட்கு வேறுதனிப் பாடசாலையும் பெண் உபாத்தியாயரும் வேண்டியது முக்கியத்தினு முக்கியமாய்க் கருதவேண்டும். கல்வியை வளர்த்தற்கு அவசியமாய் சபையொன்றும் ஒவ்வொரு கிராமங்கள் தோறும் வேண்டுமென்பது அவசியமாகும். அவற்றோடு நல்ல நடையைத் தாங்கிவரும் பத்திரிகைகளு முதவியே யாம். கற்கைநன்றே, கற்கைநன்றே, பிச்சைபுகினும் கற்கைநன்றே

மூ. ரா. மு. சோமசுந்தரம் செட்டி, கண்டனூர்.

பிழை திருத்தம்:—ஆவணிமீ பாநுவில், "ஆன்மாக்களும் முத்தியும் என்ற வியாசத்தில்" "துறந்தோர் துறப்போர் துணை" என்பதில் "துணை" என்பதைத் "தொகை" என்று திருத்திக் கொள்க.

பொ. முத்தையபிள்ளை.

சமாதான ஆராய்ச்சி.

நமது வித்தியாபாநு தொகுதி 4 பகுதி 5ல் "ஆராய்ச்சிக்குச் சமாதானம்" என்ற தலையங்கத்தின் கீழ் நண்பரவர்கள் தமது கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அதாவது திருக்குறள் மெய்யுணர்தல் 10-ஆவது பாட்டுரையில் ஆசிரியர் பரிமேலழகர் "எனக்கிது வேண்டுமென்னும் அவாவும் அதுபற்றி அப்பொருட்கட் செல்லு மாசையும்" எனக் கூறியதால் அது பற்றி அதற்கியைய "வாசனையென்பது பொருளைக் கண்டபொழுது அதனைப்பற்றிச் செல்வதாகிய ஆசை உள்ளத்தில் வசித்திருப்பது. வசித்திருக்குங்கால் அவாவென்றும், பொருள்களைப்பற்றிச் செல்லுங்கால் ஆசையென்றும் பெயர்பெறு"மென்று கூறினேனென்பதே. ஈண்டு ஆசிரியர் பரிமேலழகர் கூறியதாகக்கொண்ட "எனக்கிது வேண்டுமென்னும அவா" என்பதற்கும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறிய "பொருளைப் பெறவேண்டுமென்று மேன்மேல் நிகழும் ஆசை" என்பதற்கும் பிள்ளையவர்கள் கூறிய "பொருளைக் கண்டபொழுது அதனைப்பற்றிச் செல்வதாகிய ஆசை உள்ளத்தில் வசித்திருத்தல்" என்பதற்கும் பொருள் கருதுவாம். எனக்கிது வேண்டுமென்னும் அவாவுக்குப் பொருள் எனக்கு இந்தப்பொருள் வேண்டுமென்கின்ற அவா என்பதே.

பொருளைப் பெற வேண்டுமென்று மேன்மேல் நிகழும் ஆசைக்குப் பொருள் "பொருளையடைய வேண்டுமென்று மேலும் மேலும் நிகழும் ஆசை என்பது. பொருளைக் கண்டபொழுது அதனைப்பற்றிச் செல்வதாகிய ஆசை" உள்ளத்தில் வசித்திருத்தலுக்குப் பொருள "பொருளைக் கண்ட காலத்தில் அதனைத் தொடர்ந்து போவதாகிய ஆசை மனத்தில் தங்கியிருத்த"லென்பது. இம்முப்பொருள்களையும் நோக்குழி ஆசிரியர் பரிமேலழகர் கூற்றும ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூற்றும் பொருளைப் பெற வேண்டுமென்று முனைத்தெழும அவாவையே உணர்த்துவதாகின்றன. பிள்ளையவர்கள் கூறிய கூற்று அக்கூற்றுகட்கு மாறுபட்டு உள்ளத்தில் தங்கிய இச்சை மாத்திரம் உணர்த்துவ தாகின்றது. இவற்றால் ஆசிரியர் பரிமேலழகர் கூறியதாகக் கொண்ட அவாவின் இலக்கணமும் பிள்ளையவர்கள் கூறிய அவாவின் இலக்கணமும் பொருந்தாவாயின.

இனி ஆசிரியர் பரிமேலழகர் கூறியதாகக் கொண்ட ஆசையின் இலக்கணமும பிள்ளையவர்கள் கூறிய ஆசையின் இலக்கணமும் பொருந்துமோவெனின் பொருந்தா. என்னை? பொருளைப் பெறவேண்டுமென்று முனைத்தெழும அவசரமாகிய அவாவே பொருளைப் பற்றிச் செல்லும் அவசரமாகிய ஆசையாகத் திரிதலுறும். உள்ளத்தில் தங்கிய இச்சையானது நேர்ச பொருளைப் பற்றிச்செல்லும் ஆசையாகத் திரியும் அவசரநிலையை அடையாது. இதனால் பிள்ளையவர்கள கொண்ட ஆசையின் இலக்கணமும் பிழை படுவதாகின்றது.

பிள்ளையவர்கள் திருக்குறள் உரையாசிரியர்களுளொருவராகிய உச்சிமேற்புலவர் கொள் நச்சினார்க்கினியரைப் பிற ஆசிரியர்களுள் ஒருவராகக் கருதியது மிகவும் விசனிக்கற் பாலதாம்.

அ. முத்தையமுதலி,

உபாத்தியாயன், பரங்கிப்பேட்டை

அன்றியும் செல்வச் செழிப்புற்ற நங்கைக்குச் சகல ஆடையாபரணாதிகளு மிருப்பினும் நாயகனில்லையாயின் அவையனைத்தும் அணியப்படாமல் விலக்கப்படுவதனால் அணிவகைகள் பெண்கட்கு அழகை வளர்ப்பனவாகக் கொள்ளார். பெண்களின் அழகை வளர்ப்பவர் நாயகர்களேயென்பதும், இதனால் அழகின் கொழுமைக்கு உரியவன் கொழுநன் என்பதும் பெற்றாம். "செந்திருவைப் பொன்மகளைச் சிங்காரித் தென்னபயன் அந்தகனே நாயகனானால்" என்பதும் ஈண்டுக் கவனிக்கத் தக்கதொன்றாம். குலமகளிர்கட்குத் தம் நாயகர் அன்பே மிகப் பெருஞ் செல்வமாம். ஏனைச் செல்வங்களெல்லாம் தம் நாயகரின் அன்புச் செல்வத்துடன் கூடி நின்றாலன்றி இப் பெண்மணிகளால் ஒரு சிறிதும் விரும்பப்படா. அனிச்ச மலரினும் மென்மைவாய்ந்து செம்பஞ்சு தோய்ந்த சீறடிகள் நோவக், கல்லும் முள்ளும் கலந்த கானகத்தே, சீதாபிராட்டியார் வந்தது எதன் பொருட்டு? ராஜாதி ராஜனாகிய ஜனகமகாராஜன் புதல்வியான பிராட்டியார் பிறந்தவீட்டில் வந்திருந்தால் எல்லாச்சௌகர்யங்களும் உண்டன்றோ? தந்தைவீட்டுச் செல்வத்தை ஒரு துரும்பாக வேனும் மதியாமல் நாயகனாரது அன்பையே பெரும்பேறாக மதித்துக்,காட்டு வழி நடந்தும் காய்கனி புசித்தும் பன்னசாலையிற் பள்ளிகொண்டும் படாதபாடு பட்டதை யறியார் யாவர்? நாயகனாரது அன்புச் செல்வத்துக்கு ஏனைப் பொருட்செல்வம் சிறிதும் ஒவ்வாதெனற்கு இதைவிட வேறு சான்றும் வேண்டுமோ? நளமகாராஜன் காட்டுக்குச் செல்லுங்கால் தாய் தந்தையாதியரையும், மக்களையும், பிறரையும் பிரிந்தாலும், நாயகனை விட்டுப்பிரிய இணங்காமல் தமயந்தி கூறியதை இங்குத் தருகின்றாம்.

"குற்றமில் காட்சிக் குதலைவாய் மைந்தரையும்
பெற்றுக் கொளலாம் பெறலாமோ?—கொற்றவனே!
கோக்கா தலனைக் குலமகளுக் கென்றுரைத்தாள்
நோக்கால் மழைபொழியா நொந்து" என்பதேயாம்.

ஒரு ராஜ குடும்பத்திற் பிறந்த நங்கை ஏழை நாயகனை மணந்து அவனுடன் கூடித் தரித்திர காலக்ஷேபஞ் செய்துவருகையில் பழைய சகியொருத்திவந்து "இத்தரித்திரனுக்கு மனைவியாயினையே,

ராஜபுத்திரியாகிய உனக்கு இவ்விதியா வந்தது?' எனக் கூறிய போது அக்கொடுஞ் சொற்களைக் கேட்ட கற்பரசி, என் நாயகன் அரிச்சந்திரன் எனக்கூறிய தோழியே! நீ அறியாது கூறினாய். யானும் இங்கே ராஜரீக பதவியுடன் வாழ்கின்றேன். நீ கூறிய கோட்டையொடுகூடிய காவலமைந்த பெருநகரம் இச்சிறு குடிசையே. என் நாயகனே அரசன். யானே குடி. என நாயகரின் அன்பே பெருஞ் செல்வம். யானியற்றும் பணிவிடைகளே குடிகளுதவும் இறைப்பொருள். இந்த ராஜரீக வாழ்க்கைக்கு யாதும் குறையில்லையே'' என விடைகூறியதாகப் பொருளமைத்துப் பிற்காலப் புலவரொருவர் பாடிய செய்யுளொன்றைக் கூறுகின்றேன்.

"மிடியுளார் செல்வரென் றுரைத்த மின்னனாய்!
கடிநகர் சிறுகுடில்; காந்தன் வேந்தனும்;
அடிகளே குடி; அவர் அன்பென் செல்வமாம்;
குடியிறை என்னிறை; குறையுண் டோசொலாய்" —என்பதே.

இதனால் உத்தமகுணப் பெண்கட்குச் செல்வமென்பது தத்தம் நாயகர்களின் அன்பே அல்லாமல் பிறந்தவீட்டுப் பெருஞ் செல்வமாயினும் புகுந்த வீட்டுப் பொற்குவியலாயினும் அல்ல என்பது விளங்கும். ஆகவே செல்வத்தின் கொழுமைக்கும் உரியவன் நாயகன் என்பது சித்தித்தது.

இனி இன்பவிஷயத்திலோ இப்பெண்மணிகள் தமக்கென ஒன்றைக்கொண்டு இன்புறுதல் இல்லை. நாயகருக்கு எது இன்பமோ அதுவே இவர்க்கு மின்பமாகும். நாயகர் இன்பமுற்றால் இவரும் இன்பமெய்துவர். நாயகர் துன்பமுற்றால் இவரும் துன்பமுறுவர்.

"எப்பணியா லின்புறுவர் காதலர் அக்காதலரை
அப்பணியா லப்பொழுதே யன்புறுத்தி—ஒப்ப
மனங்குழையும் வண்ணம் மகிழ்விப்ப தன்றே
கனங்குழையார் தங்கள் கடன்"

என்ற வண்ணம் நாயகரது இன்பத்தையே தம் இன்பமாகக் கொண்டிருந்த நளாயினி முதலியோர் சரித்திரம் நாமறியாததன்றே. ஆதலின், இன்பத்தின் கொழுமைக்கு உரியனும் நாயகனே யாவன். ஆகவே கொழுநன் என்பவன் நற்குலமங்கையினது அழகு

செல்வ இன்பங்களின் கொழுமைக்கு உரிமைபூண்ட கணவனெயா தல் சித்தித்தது. இனி இத்தகைய கணவனைப்பேணல் என்பதைப் பற்றி ஆராய்வோம். பேணல் எனற்குக் காத்தல் என்பது பொருளாம். கணவனைக் காத்தல் எனவே அக்காவலின் தன்மை விசாரித் தறியத்தக்கதாயிற்று. காவல் என்பது ஒரு பொருளைப் பிறர் பற் ருவாறு காத்திருப்பது மட்டுமன்று. அப்பொருட்கு வேண்டும் நன் மைகளை யெல்லாம் காலமறிந்து தக்கவாறு செய்தலே காவலாகும். 'அரசன் குடிகளைக் காத்தான்' என்ருல் குடிகள் ஓடிவிடாமல்காவ ல் செய்தான் என்பது பொருளன்று. குடிகட்கு வேண்டும் நன் மைகளைக் காலந்தவருது செய்தான் என்பதே பொருளாம். இத னுள் மற்றதும் அடங்கும். ஆகவே கொழுநனைப் பேணல், எனற்கு 'நாயகனுக்கு வேண்டிய நன்மைகளை யெல்லாம் செய்தல் என்பது பெறப்படும். நாயகனுக்குரிய சகலபொருள்களையும் பகுத்துக்கூறுமிட த்து உடல் பொருள் ஆவி என மூன்றனுளடங்கும். இம்மூன்றனையும் காத்தலே இங்குக்கூறிய பேணல் என்பதாம். கணவன் நாவிற்கினிமை தரத்தக்க நல்ல உணவுகளை யெல்லாம் காலந்தவருது செய்வித்துப் படைத்து உண்பித்துக் கணவனது உடலைப்பேண வேண்டும். கணவ னுடலில் குளிர் வெப்பம் ஆதியன மிகுந்தும் குறைந்தும் இருத்த லுக் கேற்ப உணவு பதார்த்தங்களைப் பக்குவஞ் செய்யும்போதே குடித்தன முறையிற் பழக்கத்தாலறிந்து இது வாயு பதார்த்தம், இது குளிர்ச்சியைத்தரும், இது உஷ்ணப்படுத்தும் என ஆராய்ந்து கூட்டவேண்டியதைக் கூட்டியும், குறைக்கவேண்டியதைக் குறைத் தும், பக்குவப்படுத்திக் கணவனை யுண்பிக்கவேண்டும். இவை போ ன்ற உடல் வளர்ச்சிக்குரிய காரியங்களை யெல்லாம் நாயகி தன் கவ னத்தில் அமைத்துத் தொழிற்படுத்தவேண்டும். இங்ஙனமின்றி நாயகனுக்கு இனிப்பு வேண்டுமென்ருல் தனக்கு எரிப்பு வேண்டு மென்றும் நாயகனுக்கு ரசம் வேண்டுமென்ருல் தனக்குக் குழம்பு வேண்டும் என்றும் நாயகன் தூங்கவேண்டுமென்ருல் தான் விழித் திருக்கவேண்டுமென்றும், ஏறுக்கு மாருக நடப்பது கற்புடைய பெண்களின் குணமன்று.

கணவன் தேடிவந்த பொருளைக்கொண்டு மனைக்குரிய பண்ட ப்தார்த்தங்களைக் காலமறிந்து வேண்டுமளவு வாங்கித் தொகுப்பித்

தும் அப் பண்ட பதார்த்தங்கள் கெடாதவாறு வெயிலிலுலர்த்திப் பாதுகாத்தும், அறவகையினும் செலவிட்டுத் தாமுமுண் டுடுத்துப் பொருளைப் பேணவேண்டும். அறவகையிலாயினும் குடும்ப சுபா சுப வகைகளிலாயினும் ஆடை யாபரணாதிகளிலாயினும் தம்நாயகர்க் குரிய பொருளின் அளவையறிந்து அதற்குத் தக்கபடியே செலவி ட்டு அவ் வளவிற்றானே மன மகிழவேண்டும். அயல்வீட்டு மங்கை யைப்போலத் தானும் தன்னளவிற்கு மிஞ்சிய ஆடை யாபரணாதி களைக் கொள்ளவேண்டுமென்றாவது மற்ற வீட்டார் விவாகத்தில் அத்தனை பணம் செலவிட்டார்களே யாமும் அவ்வாறு நமதுபிள்ளை விவாகத்தில் செலவிடவேண்டுமென்றாவது மற்றவர் பெரியவீடுகட் டியதைக் கண்டு நாமும் அவ்விதம் பெரியவீடு கட்டவேண்டுமென் றாவது தன் நிலையை யுணராது நாயகனைத் துன்பப்படுத்துவது பதி விரதைக்கு இயற்கையன்று. தற்காலத்துப் பெண்பாலார் பலர் இவற்றை உணராது நாயகர்கள்பாற் சுடுசொற் கூறித் துன்புறுத்து கின்றனர். அயலகத்தானொருவன் ஒரு வியாபாரத்தால் லட்ச ரூபாய் கொண்டுவந்து பெருமிதமாக வீடும் கட்டி விவாகமும் செய் வித்தானென்றால் அதுகண்ட சில பேதைப்பெண்கள் தங்கள் நாயக ரை நோக்கி "அவனைப்போல நீங்களும் ஆண்பிள்ளைதானே? நீங் கள் ஆண்பிள்ளையானால் எந்தத் தொலைக்குப் போயாவது தேடிக்கொ ண்டுவாருங்கள். வீண்பிள்ளையானால் இருந்த இடத்திலிருந்து தூங்கிவிழுங்கள். அடுத்த வீட்டுச் *சாலாட்சி-புருஷன் அவளுக்கு என்ன என்ன நகை? என்ன என்ன சேலை? என்ன என்ன சாமான் கள் கொண்டுவந்திருக்கிறான்? மகன் கலியாணத்தில் இருபதுவரா கன் செலவாம். வீடுதான் என்ன பளபள என்றிருக்கிறதே. நீங் கள் இவற்றையெல்லாம் பார்த்தும் சும்மா இருக்கிறீர்களே, தேட முடியாவிட்டால் இருக்கிற கிராமம் பூமியை விற்றாவது கடன் வா ங்கியாவது நகைசெய்து போடுங்கள்" என்று இன்னும் பலவாறு சொல்லித் துன்பப்படுத்துகின்றனர். இந்தப்பெண்சாதியாகிய தேள் கொட்டலைச் சகியாமல் அவர்க ளிஷ்டப்படியே தம்மளவிற்கு மிஞ் சிய நகைகளைச் செய்வித்தும் வீடுகட்டியும் விவாக முதலியவற்றை நடத்தியும் எத்தனைபேர் கெடுகின்றனர்? இவர் நகை செய்வதெல் லாம் பிறர் நகைசெய்வதாதலை யறிந்திலர்.

---

*விசாலாட்சி என்பதன் மரூஉ

"ஆன முதலில் அதிகம் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
யெல்லார்க்குங் கள்ளனாய் யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு."

என்றவாறு தம்முடைய பொருளின் அளவையறியாது பிறர்தோது கருதி அதிகச் செலவுசெய்து கெடுபவர் பலரன்றோ? இக்கேட்டுக்கு முக்கிய காரணம் நமது பேதைப் பெண்களின் அறிவில்லாமையேயாகும். ஆகவே தங்கள் பொருளின் அளவிற்கேற்பச் செலவிடுதல் பதிவிரதாசிகாமணிகளின் கடனாம். இதுபற்றியே,

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை."

என்றார் பொய்யில்புலவர்.

"வளவனாயினும் அளவறிந் தளித்துண்" என்பதையும்,
"ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை, போகா றகலாக் கடை"

என்பதையும் கடைப்பிடித்து "இல்லறம் பொருளளவிற்கேற்பச் செய்க" என்ற முறையையுணர்ந்து தமது செல்வத்துக்குத் தக்க வண்ணம் செலவிடுகின்ற மனைவி ஒருவனுக்கு வாய்ப்பளாயின் அவனுக்கு அதைவிடப்பெரும் பாக்கியம்வேறில்லை. இதனாற்றான் "வருவாய்க் கியைய வாழ்தலூறு மறுவில் கற்பின் மனையாள்போற், பொருள் யாவுளவாம்?" என்றார் விநாயக புராணாசிரியரும். நமது அருமைப்பெண்கள் சிகாமணிகள் மட்டும் இந்த நீதியை யுணர்ந்து நடப்பார்களாயின், நம்மவருள் ஒருவரும் வறுமைப்படார். மானமிழக்கார். புதுச்சேரி புகார். ஆதலால் நாயகர்களின் பொருட்காவல் பத்தினிமார்களின் கவனத்தாலே நிலைபெறுவதாகுமெனக.

இனி உயிர்க்காவலை ஆராய்வாம். "சிறப்பீனுஞ் செல்வமுமீனும் அறத்தினூஉங்கு, ஆக்கம் எவனோ உயிர்க்கு"

என்றாராகலின், உயிர்க்குத் துணையாய்நின்று நலம்புரிவது அறமேயாகும். அந்த அறச்செயல் அனைத்தும் மனைவியாலேதான் நிலைபெறும். தென்புலத்தார்க்குச் செய்கடன் தீர்க்கவும், தெய்வ வழிபாடு செவ்விது நடாத்தவும், விருந்தினர்ப் போற்றவும், ஒக்கலைக்காக்க

வும் மனைவியின் குணவிசேடமே முக்கிய கருவியாம். எந்த அறமும் மனைவியின் றுணையின்றிச் செயற்பாலதன்று. நாயகனானவன் அறச் செயல்களைச் சிந்தித்தற்கு மட்டுமே உரியனாவன். அவன் சிந்தித்தவாறு செய்து முடித்தற்கு நாயகியே யுரியளாவள். மனைவியின் சம்மதமில்லையாயின் ஒரு அறச் செயலும் நடைபெறாது. ஒரு விருந்தினரை யழைத்து வந்து அன்னமிட வேண்டுமென்றால் "ஆமாம். குறைச்சலில்லை. விருந்து வராத நாள்தானில்லையே! நித்த நித்தம் இந்த இழவுதானே? பொங்கிய சோற்றைப் போட்டு வயிறாரத் தின்னலாமென்பது தான் இல்லையே. என்னால் இனிப் பொங்கவும் போடவும் முடியாது. தலையை வலிக்கிறது." என்று கடுகடுத்துக் கூறி, முக்காடிட்டுப் படுத்துக் கொள்ளும் மூதேவி மனைவியாக வாய்த்தால் மணமகனுக்கு அறமெங்கே? புகழெங்கே? எத்தனை செல்வமிருப்பினும் என்னபயன்? அவன் சகல வாழ்வு மற்றவனே.

"மனைமாட்சி யில்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை, எனை மாட்சித் தாயினு மில்" எனவும், "மனைத்தக்காள் மாண்பிலள் ஆபின் மணமகன் நல்லறம்,பூண்டபுலப்படா."? எனவும் பெரியோர் கூறுமாறுங் காண்க. உத்தமப் பெண்மணிகளாவார் கணவன் குறிப்பறிந்து அவன் சொல்லு முன்னமே தாமாக உபசரித்து வேண்டுவன செய்வர். கொண்டான் குறிப்பறிபவளே பெண்டாட்டியாவள். ஒரு காரியத்தைச் செய் என்றால் "செய்தேன்" என்பள். இளையான்குடி மாறநாயனார் மனைவியின் சரித்திரத்தைப் பாருங்கள். தாங்கள் பட்டினியாற் றளர்பவராகவும், நளிர்துளிப்பெய்யும் நள்ளிராப்போது வந்த மெய்யடியார் சிந்தை நோகாமல் நென்முளை வாரி வந்து கொடுப்ப மற்றதை வறுத்துக் குற்றிச் சமைத்து அமுது செய்வித்தனர். அற்புதம்! அற்புதம்.! இத்தகைய நற்குண நற்செயலமைந்த பெண்கள் திலகத்தைக்கைப்பிடித்து வாழ்வதே வாழ்வாகும். அதுவே சிறந்த நல்லற மாகும். அவர்க்கே இருமையின் பமும் எய்தும். நாயகன் பணித்தவற்றைக் காரணங்கேளாமலே செய்து முடிப்பது தான் உத்தம மங்கையர் கடன். காரணங் கேட்டு ஆக்ஷேப நிகழ்த்தி முடியாமை கூறி கன்னத்திலும் முதுகிலும் நாலு கொடுத்த பின்பு கண்ணீரை வடித்து மனத்துள்ளே

வைதுகொண்டு செய்பவள் பெண்ணல்லள். அவளைப் பேயென்றாலும் நாயென்றாலும் குற்றமாகாது.

திருவள்ளுவர் ஒரு தினம் உண்ணும்போது ஒரு கிண்ணத்தில் நீரும் ஊசியும் கொண்டு வந்து வைக்கும் வண்ணம் தமதருமைப் பத்தினியார்க்குக் கட்டளையிட்டனராம். அவ்வம்மையார் அங்ஙனமே தினமுங் கொண்டு வந்து வைத்தனராம். இங்ஙனம் பல வருஷங்கள் நடந்தும் ஒரு நாளாவது கிண்ணத்து நீரும் ஊசியும் ஒரு விதத்தாலும் உபயோகப்படுத்தப் படவில்லையாம். அம்மையார் மரணகாலத்து மிகவும் ஏக்கங் கொண்டிருப்பதறிந்து தேவர் "பெண்ணே! எதை நினைத்துள்ளாய்?" என்றனராம். அம்மையார் இரண்டு கைகளையும் குவித்து "நீரும் ஊசியும் உண்ணும்போது வைக்கும்படி கட்டளை யிட்டருளிய வண்ணம் வைத்து வந்தேன். அவை இன்னவித உபயோகத்துக்காக வைக்கப் பெற்றன வென்பது தெரிந்திலன். அதையே நினைந்துள்ளேன்" என்றனராம். வள்ளுவதேவர் "சாதம் சிந்தினால் ஊசியாற் குத்தியெடுத்து நீரில் தோய்த்து இலையில் இடுதற்காக வைக்கச் சொன்னேன்" என்றனராம். உடனே அம்மையார் உயிர் நீங்கிற்றாம். இவ்வாறு ஓர் கதை சொல்வதுண்டு.

இதில் பல வருஷகாலம் காரணம் வினவாமை மட்டுமன்று. ஒருபோதாவது அன்னஞ் சிந்தாமற் படைத்து வந்ததோர் பேராச்சரியமுங் கவனிக்கற்பாற்றாம். *நாயகன் செய்யும் சகல நற்காரி

---

* நாயகன் வினைவசத்தாலாவது அறியாமை வசத்தாலாவது தான் செய்யவேண்டிய அறநிலையினின்று வழுவுங் காலத்தும் அவனுடனிணங்கி நின்று தக்க சூழ்ச்சியால் அவனைத் திருத்தி நன்னெறிக்கட் செலுத்தும் கடமையும் நாயகியினுடையதேயாம். கூன்பாண்டியன் தனது மரபிற்குரிய மெய்ச்சமயமாகிய சைவசமயத்தை விட்டுச் சமண் மதப் பிணிப் புற்றிருக்குங் கால் அவனை விட்டுவிலகாது அவனுடனிருந்தே நமது சபையின் பெயர்ப்பொருளாகிய ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகளை வரவழைத்து சமணக் களையை வேரோடு களைந்து சைவப்பயிரைத் தழைப்பித்த கனங்குழை மாதர் சிகாமணி மங்கையர்க்கரசியாரன்றோ? இந்த அம்மையார் செய்து வைத்த பெரும் பாக்கியத்தாலல்லவா யாமெல்லாம் இற்றைக்குஞ் சைவசமயிகளாகி வாழ்கின்றோம்? இதனால் நாயகனது நல்வினைகட்குத் துணை நின்று வளர்ப்பதும் அவன் செய்யும் தீவினைகட்கு இடையூறு செய்து அதனைப் போக்கி நல்வழிப்படுத்தலும் ஆகிய இருவழியானும் கணவனது அறத்தைக் காப்பவள் கற்புடைய நாயகியே என்பது போதரும்.

யங்களையும் முட்டின்றி முடிக்கும் பெற்றியால் நாயகனுயிர்க்குக் காவலாயமைவன மனைவியின் நற்குண நற்செயல்களே யென்பதும் பெறப்பட்டன. மேற்கூறிப் போந்தவற்றானே கணவனைப் பேணுங் கடமை கற்புடைய நங்கைக்கே யுரியதென்பது தானே போதரும். "கொண்டானை அல்லால் அறியாக் குலமகள்" எனவும். குல மகட்குத் தெய்வம் கொழுநனே" எனவும் கூறுப ஆதலின் நற்குலத் துதித்த நாரியர் சிகாமணிக்கு நாயகனைத் தவிர வேறு தெய்வமில்லை.

இங்ஙனம் கணவனையே தெய்வமாகக் கொண்டொழுகும் பெண்மணிக்கு எல்லாத் தெய்வங்களும் எதிர்வந்து நின்று வேண்டுவன செய்யும் என்பது பல சரித்திர வாயிலாகவும் அறியலாம். சீதா பிராட்டி, தமயந்தி, கண்ணகி முதலிய பெண்மணிகளிட்ட சாபங்கள் தெய்வவாக்கோடொப்ப முட்டின்றி நடைபெற்றதை யறியாதாருண்டோ? இதனால், கொழுநனைப் பேணுங் கடமை குலமகளுக்கே யுரியதென்பது பெறப்பட்டது."குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்" என்ற அருமைச் செய்யுளும் ஈண்டுக் கவனிக்கற்பாற்றும்.

குடும்பத்தின் தலைமையை வகிக்கும் சுதந்தரத்துக் குரிமை பூண்ட தலைவன் தலைவி என்னுமிருவருள் தலைவியானவள் தனக்கென யாதொரு சுதந்தரமும் சுகதுக்கமும் கொள்ளாமல் தலைவனையே கதியாகக் கொண்டு பேணுதலாகிய பெரும் பொறுப்பை வகிப்பதனால் பெறத்தக்க பயன் என்னையென ஆராய்வாம். மக்களாகப் பிறந்தார் யாவரும் இம்மை மறுமை இன்பங்களை யடையவேண்டும். இம்மை யின்பம் புகழும் மறுமையின்பம் சுவர்க்காதி மோக்ஷங்களுமாம். கற்புநிலையுடைய பெண்மணிகளை உலகத்தார் தெய்வமாக நினைத்துப் போற்றுவர். "கற்புக் கடன்பூண்ட இத்தெய்வ மல்லது பொற்புடைத்தெய்வம் யாங்கண்டிலமால்" என்றார் பிறரும். கற்புடையவள் சொன்ன சொல்லை எல்லாத்தெய்வங்களும் கேட்டுப் பணிபுரியுமாயின் அவளை உலகத்தார் புகழ்வது சொல்லவும் வேண்டுமோ? அப்பெண்மணி பெய் என்றால் மழை பெய்யும். அவள் நினைத்தகாரியம் உடனே கைகூடும். குலத்தாலும் வயதாலும் அறிவாதிகளாலும் பெரியோராயினும், ஒரு கற்புடைய பெண் மணியைக் கைகூப்பி வணங்கி வாழ்த்துவர். ஆதலின் இம்மை யின்பம் பேற்ற

ண்மை விளக்கமாயிற்று. சுவர்க்காதி மறுமை யின்பங்கள் இவர்க்கு வாய்க்கு மென்பதென்னே? ஒரு கற்புச்செல்வியைப் பெற்றவர் குலமும் அவளை மணந்த காதலன் சுற்றத் தாருங்கூட எண்ணிறந்த காலம் சுவர்க்க இன்பத்தை யடைவ ரன்றோ? இதனை.

"கற்பு மேய கனங்குழை மாதரைப்
பெற்று ளோர்தம் மரபும் பெருந்தலைக்
கற்பி னுட்கொண்ட காதல னுருயிர்ச
சுற்றம் யாவும் துறக்கத்தி னெய்துமால்," என்பதனுலுணர்க.

இக்கற்பரசிகள் பாதந் தோய்ந்த இடமெல்லாம் சகல புண்ணிய த் தலங்களிலும் சிறந்த புண்ணியத்தானமாகும் என்பதனை:

"நண்ணு கற்புடை நங்கையர் சீறடி
மண்ணி னெவ்விடந் தோயினு மற்றலை
தெண்ணு கின்ற தலங்க ளெவற்றினும்
புண்ணி யத்தல மென்று புகல்வரால்" என்பதாலறியலாம்.

"வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தன் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு."

என்ப ஆகலின் கொழுநனைப் பேணுங் குலப் பூங்கோதையர் வாழும் நாட்டில் பஞ்சம் வராது. வளங்கள்குறையா. ராஜநீதி தவறாது. இம்மங்கையர் வாழ்வாற்றான் உலகம் நிலைபெறுவது என்றிருக்கும் ஆயின் கொழுநனைப்பேணலாற் பெறும் பயன் இவ்வளவிற்றென்று வரையறுத்துக்கூறும் வல்லவர் யாவர்? இப்பெண்மணிகளின் பெருமையைக் கூற ஆதிசேடனாலும் முடியாது.

இனி கொழுநனைப் பேணாமையால் வருந்தீங்குகளைக் கவனிப்பாம். மனமகிழ்ச்சியோடு நாயகனைப் பணியாமல் அரிய விரதங்களையும் பூசைகளையும் செய்கின்ற பெண்களை யமதூதர்கள் பிடித்து எரிவாய் நரகத்திற் றள்ளித் துன்பப் படுத்துவரெனவும், நாயகர் பழியைக் கூறுகின்ற பெண்களும் நாயகருடன் கடுகடுத்துப் பேசுகின்ற பெண்களும் ஓரியாகப் பிறப்பார்களென்றும், நாயகர் கோபித்த போது நாயகரை வைகிற பெண்கள் புலியாகப் பிறப்பார்க

ளெனவும், தன்னைப்போல நாயகன் அன்பிற்குப் பாத்தியப் பட்ட மாற்றவளிடம் பகைமை பாராட்டித் தீங்கு செய்யும் பெண் கூகையாகப் பிறப்பா ளெனவும், பரபுருஷர் அழகைக்கண்டு விரும்புபவர்கள் பேயாகப் போவார்கள் எனவும், நாயகர் பசித்திருக்க அவரை உண்பிக்காமல் தாங்கள் மட்டும் வயிறுநிறையத் தின்கிற பெண்கள் பன்றியாய்ப் பிறப்பார்களெனவும், கற்பு நிலைதவறிய பெண்களின் வம்சத்தவர்களெல்லாம் கொடிய நரகத்தில் அழுந்துவார்களெனவும் நூல்கள் முழக்குகின்றன. இம்மையினும் இவர்கட்குப் பழியல்லது புகழில்லை.

எறியென் றெதிர் நிற்பாள் கூற்றம் சிறுகாலை
அட்டில் புகாதாள் அரும்பிணி—அட்டதனை
உண்டி உதவாதாள் இல்வாழ்பேய் இம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை.

என இகழப்படுவாராதலின் இம்மையின்பமும் அடையார். ஆதலால் கொழுநனைப் பேணலால் இம்மை மறுமை யின்பங்களைப்பெறுவரெனவும், கொழுநனைப் பேணாத பெண்கள் இம்மை மறுமையிரண்டினும் பிரயோசனமற்றவர்களாகி மீளாநரகிற்கே ஆளாவாரெனவும் புலப்படுதல் காண்க

நல்ல குலத்தில் நல்ல குடியிற் பிறந்த புண்ணியவதிகள் தங்கட்கு வாய்த்த நாயகர் அழகில்லாவிடினும் விகார ரூபமுற்றிருப்பினும் அது பற்றி அன்பு மாறாது தங்களுடைய அவயவங்களில் ஏதாவது குறைந்திருந்தாலும் குறைந்த தம் அவயவத்தையும் தாங்கள் நன்கு பாதுகாப்பது போலவே தம் நாயகரை அன்போடு பேண வேண்டும். நாயகர் உண்டபின் தாம் உண்ணவேண்டும். நாயகர் உறங்கிய பின் உறங்கி எழுவதன் முன்னே எழவேண்டும். நாயகர் கோபித்தாலும் தாம் கோபம் கொள்ளாமல் இன்மொழி கூறி, வேண்டுவன செய்து, அவர் கோபத்தை மாற்றவேண்டும். தம் வீட்டை விட்டு அயல் வீடுகட்கு அடுத்தடுத்துப் போதல் கூடாது. புண்ணிய தீர்த்த ஸ்நானம் திவ்ய க்ஷேத்திர யாத்திரை திருவிழாக் காட்சி விரத மிருத்தல் முதலிய சற்கருமங்களைச் செய்யவேண்டுமாயினும் நாயகர் உத்தரவுபெற்றுக்கொண்டே செய்யவேண்டும். தம் நாயகர் பெயரைச் சொன்னால் அவர் ஆயுள் குறையுமாதலால் அவர் பெய

னைச் சொல்லலாகாது. நாயகருண்ட சேஷத்தை அமுதமாகப் பாவித்து உண்ணவேண்டும். நாயகரில்லாத காலத்து புண்ணிய நதியாட நேர்ந்தால் அந்நாயகரை நினைத்து சூரியனை நோக்கி ஸ்நானஞ் செய்யவேண்டும். தமது செல்வங் குறையாதிருக்க வேண்டி உரல் அம்மி வாயிற்படி உலக்கை முறம் ஆகிய இவைற்றின் மீது உட்காருதல் கூடாது. நாயகருக்கு ஆயுள் விருத்தியாக வேண்டி தாம மஞ்சள் அணிந்து கொள்ளவேண்டும். நாயகன் நாயகி என உடலிரண்டாயினும் உயிர் ஒன்றேயாக நாயகன் விரும்பியதையே தானும் விரும்பி நாயகன் வெறுப்பதை யெல்லாம் தானும் வெறுத்து வாழவேண்டும். இவையெல்லாம் கொழுநனைப் பேணும் குலமகளிர் கடமைகளாம். வாழ்க்கைத் துணையாகிய கற்புடைய நங்கையர் செய்வனவும் தவிர்வனவு மாகிய கடமைகளை யிதுகாறுங் கூறினோம். இனி 'ஒன்றின் முடித்தல், தன்னின் முடித்த' லென்னு முத்தியால் மனைவியைக்கணவன் பரிபாலிக்க வேண்டிய முறையினும் சிறிது கூறி முடிப்பாம்.

தாய் தந்தை சகோதரர் உற்றார் முதலிய யாவரையும்விடுத்துத் தம்மையே கதியாக வந்த மனைவியை; அவளது தாய் தந்தைய ராதியர் போல நாயகன் பரிபாலிக்கவேண்டும். மனைவியினிடத்து அன்புடனிருக்க வேண்டும். மனைவியினிடம் ஏதாவது குறைகளைக் கண்டால் மிகக்கடின தண்டனை புரியாமல நயவசனங்களாலே சிறிது சிறிதாகத் திருத்திக்கொள்ள வேண்டும். "இதத்தால் வசமாம் சின விலங்கும்" என்பவாதலின் நயமொழியால் எத்தகைய குணக்கேட்டையும் திருத்தி விடலாம். தம்முடைய சகல சுகாசுகங்கட்கும் நிலைக்களமாயிருக்கும் மனைவியைக் கேவலம் அடிமையைப் போலக் கருதி நடத்தல் கூடாது. புருஷன் மனைவியினிடத்து அன்பு மாறாமல் இதவசனத்துடன் இருந்தால் கொடியவளான மனைவியும் மிக விரைவில் நல்லவளாவது நிச்சயம். பெண்கள் தம் நாயகரிடத்திலுள்ள அன்பு நீங்க வெறுப்பு வருவதற்குக் காரணம் பெரும்பான்மை ஒன்றே ஒன்று தான் உண்டு. அதாவது தம் நாயகர் தமமிடத்து வைத்திருகக வேண்டிய அன்பை வேறொரு பெண்ணிடத்தும் வைத்திருப்பதாகக் கண்டால் தான். ஆதலின் புருஷர்கள் பரஸ்திரீ கமனத்தை அறவே நீக்க வேண்டும். இங்ஙனமிருந்தால் இருவரும்

மனம் ஒத்து எல்லாவித சௌக்கியங்களையும் அடைந்து இருமை யின்பமும் ஒருமையிற்பெற்று வாழ்வார்களென்பது சத்தியம் சத்தியம். 'வந்தெனைக்கரம் பற்றிய வைகல்வாய், இந்த இப்பிறவிக்கிரு மாதரைச், சிந்தையாலுந் தொடேனென்ற செவ்வரம், தந்தவார்த்தை திருச்செவி சாற்றுவாய்'' என்னும் சீதாபிராட்டியார் வாக்கு நோக்கத் தக்கதாம்.

"வருவாய்க் கியைய வாழ்தலுறு மறுவில் கற்பின் மனையாள்போற்
பொருள்யா வுளவா மதுவன்றிப் புகழும் பயனு மிகவுண்டாங்
கருதா ரெதிரே யிமிலேற்றுக் காமர் நடையு முறுமதனு
லொருவா தவளோ டொப்புறவே யுற்று வாழ்த லறனாகும்."

இங்ஙனம்,

மு. ரா. கந்தசாமிக் கவிராயர்,

வித்தியாபாநுப் பத்திராதிபர்,

மதுரை.

9—9—12.

ஒரு பிழை திருத்தம்.

சென்ற ஆவணி மீ பாநுவில் 158-வது பக்கம் 16-வது வரியில் "விகாரங்கூறிற்றிலர்'' என்பதை "பொது விகாரங்கூறிற்றிலர்'' என்று திருத்திப்படிக்க.

மு. கதிரேசச் செட்டி.

மாலினீ மாதவம்.

(147-ம் பக்கத் தொடர்ச்சி.)

பதினாறாவது அத்தியாயம்.

சிறைச்சாலை.

மாதவனுக்கு மரணதண்டனை விதித்துச் சில நாட்களாயின. மாதவன் ஹைகோர்ட் உறுதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றான். எந்தத் தினத்தில் எந்நேரத்தில் வருமோ தெரியாது.

பிறவி முதல் பிராணிகளுக்கெல்லாம் ஸகஜமாய் உயிரின் மீது ஓர் வித அன்புண்டென்பது யாவரும் அறிந்த விஷயம். ஒன்றை வெறுக்கத் துணிபவன் சாகத்துணியான். இது பொதுவான விதி. அப்படியிருக்க உயிரையும் வெறுக்கத் துணியும் சில காலங்கள் மனித வாழ்வில் ஏற்பட்டு விடுகின்றன. உயிரே ப்ரதானமாகவும் மற்றவைகளெல்லாம் இரண்டாம் பக்ஷமாகவும் கருதுபவர்கள் உயிரின்மீதே மிக்க அன்பு பாராட்டுகின்றார்கள். அவ்வாறு இரண்டாம் பக்ஷமாய்க் கருதப்படுபவைகள் எக்காரணத்தாலாவது கைக்கெட்டாவிட்டால், "இவ்வுயிரிருந்து என்ன சாதிக்க?" என்று ஓர் வித வெறுப்பு ஏற்பட்டு வருகின்றது. நிற்க.

நமது மாதவன் மதுரை "புதுஜெயி"லில கைதியாய் இருக்கின்றான். ஒரு நாட்காலை சுமார் 8 மணி இருக்கலாம். "புதுஜெயில்" முன்பாகச் செல்லும் பெருஞ் சாலையில் திடீரென்று ஓர் "ப்ரூஹாம்" வண்டி வந்து நின்றது. பின் தட்டில் நின்று "ஹேய் ஹேய்" என்று எச்சரித்துக் கொண்டுவந்த வில்லைச் சேவகன் திடீரென்று குதித்து வண்டியின் வடபுறமாய் வந்து கைப்பிடியைச் சுழற்றிக் கதவு திறந்தது. உடனே அவ்வண்டியிலிருந்து, கழுத்து முதல் முழங்கால் வரை "அல்பாகா" உடைதரித்து, கால்களில் காற்சட்டை "பூட்ஸ்" அணிந்து, காஞ்சீபுரம் ஜரிகை ருத்ராக்ஷக்கரை வேஷ்டியொன்றைக் கரைக்காண மடித்து யோகவேஷ்டியாய்த் தரித்துத்

திண்டுக்கல் தலைப்பாகையும், தங்கம் கட்டிய மூக்குக் கண்ணாடியும் மணிந்த ஒருவராமெதுவாகக் கீழே இறங்கினார். இவருக்கு சுமார் 50 வயதிருக்கலாம சேவகன் வண்டிக்குள்ளிருந்த ஓர் கைப்பை (Brief-bag.) யை எடுத்துக் கொண்டு பின் சென்றான. பிரபு கம்பீரமாய் முன் நடக்க, அவர் பின் சேவகன் செலல, இருவரும் ஜெயில் ப்ரகாரத்துக்குட் புகுந்து அதற்கடுத்த பெரிய வாசலில் நின்றார்கள். அவ்வாசலைக் காத்துக் கொண்டு எதிர் எதிராய் நின்றுகொண்டிருந்த இரண்டு சேவகர்கள் விறைத்தபடியே நின்று கொண்டு பிரபுவுக்கு "ராணுவ ஸலா"மிட்டார்கள். பிரபுவும் தனது மந்தஹாஸ வதனத்தை யசைத்து அதை அங்கீகரித்தார். உடனே ஓர் சேவகன் எதிரே வந்து, ஸலாமிட்டு "மஹராஜ்! என்ன விசேசம்?" என்று வினவினான்.

ப்ரபு:—"உங்கள் ஸூபெரிண் டெண் டெண்ட் இருக்கிறாரா? ஓர் கைதியைப் பார்த்துப் பேசிப் போகவேண்டும்" என்று சம்பீரமாய்ச்சொல்ல,

சேவகன்:—"கேட்டுக்கிட்டு வருகேன் எஜமான்," என்று சொல்லி விரைவாய் உட்புகுந்தான். சிறிது நேரத்துக் கெல்லாம் அவன் மறுபடி வந்து "வரச்சொல்லுதாக, துரையவுக" என்று சொல்ல, ப்ரபுவும், பின்னாலே அவர் சேவகனும் உட்புக ஆரம்பிக்க, ஜெயில் சேவகன் "மஹராஜ் எஜமானை மாத்திரம் உள்ளே வரும்படி உத்தரவாயி-ருக்-கு-து" என்றான்.

ப்ரபு:—(மந்தஹாஸத்துடன்) "பாதகமில்லை, மூக்கா! பையை என் கையில் கொடு" என்று கேட்க, அதற்குள் ஜெயில் சேவகன் அதைத் தன் கையில் வாங்கிக் கொண்டான். சேவகன் முன்னும் ப்ரபு பின்னுமாக ஜெயிலுக்குள் நுழைந்தார்கள். கடைசியில் முன் அணியிலிருந்த ஓர் ஆபீஸில் வந்து சேர்ந்தார்கள். ஆங்கு ஓர் மேஜைக்குப் பின் போடப்பட்ட ஓர் நாற்காலியில், "ஸூபெரிண் டெண்டெண்ட்" உட்கார்ந்து வெகு முறுக்காய் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்.

ப்ரபு உள்ளே நுழைந்ததும் துரைக்கு, "குட் மார்னிங்!" மிஸ்டர்" என்று ஸலாமிட, துரையும் மந்த ஹாஸத்துடன் தன் பேனாவைப் பற்களில் வைத்துக் கடித்தபடியே பற்களை இளித்துக்கொண்டு, "அலோ! குட்மார்ன், இவ்வாஸனத்தில் உட்காருங்கள்" என்று சொல்ல, ப்ரபுவும் அவ்வாறே அமர்ந்தார்.

துரை:—"ஏதாவது விசேஷம்?"

ப்ரபு:—"ஓர் கைதியைக் கண்டு பேசிப் போக வேண்டும் என்று வந்தேன்."

துரை:—"நல்லது! யாரது?"

ப்ரபு:—"மாதவன் என்று—"

துரை:—"ஓ! அந்த— அதென்ன?—மாணிபுரம் கேஸ்—அது நல்ல வேடிக்கைக் கேஸ்—அப்படித்தானே?—ஜட்ஜ் புத்திசாலி! அப்படித்தானே?—

ப்ரபு:—(சற்று வாடிய தன் முகத்தை ஸாமர்த்தியத்தால் மறைத்துக்கொண்டு, ச்ரமப்பட்டுப் புன்னகை கொண்டு) "ஆமாம், அவன் தான்—" என்றார்.

துரை:—"மாதவனைப் பார்க்கவேண்டுமோ? ஏதாவது மேல் நடவடிக்கைகள்?"

ப்ரபு:—"அது விஷயமாய்த்தான்—"

துரை:—"மன்னித்துக் கொள்ளவேண்டும். இந்த விஷயத்தில் அவ்வளவு ரகஸ்யங்களை நான் விவலாகாது 'ஜெயில் ரூல்' ப்ரகாரம். ரகஸ்யமாய்ப் பேசவேண்டுமானால் அதோ அந்த அறை, அதில் போய் உட்காருங்கள். வேண்டிய ஸமாசாரங்களைக் கேட்டுக் கொள்ளலாம்."

ப்ரபு:—"தாங்கஸ்!"

துரை:—"குட்மார்ன்! வார்டர்! கைதி மாதவனை அந்த அறைக்கு இட்டுக்கினுபோங்கோ."

ஜெயில் சேவகன் பிரபுவை அழைத்துச் சென்று ஓர் அறையிற் போட்டிருந்த ஒரு நாற்காலியில் உட்காரச் சொன்னான். சிறிது நேரத்துக்கெல்லாம் வார்டர்கள் மாதவனை அழைத்து வந்து ப்ரபுவின் முன் நிறுத்தினார்கள். ப்ரபு தன் உடைப் பையினின்றும், ஒரு ரூபாயை எடுத்துச் சேவகன் கையிற் கொடுத்து "நீங்கள் மூவரும் காபிவாங்கிச் சாப்பிடுங்கள்" என்றார். சேவகன் "ஸலாம் மஹாராஜ்" என்று ஸலாமிட, மூவரும் வெளியே சென்றார்கள்.

மாதவன் அறைக்குட் புகுந்து ப்ரபுவைப் பார்த்துத் திடுக்கிட்டு ப்ரமித்தான். ஆயினும் தன் புத்தித் திறமையால் தன் ஆச்சரியத்தை யடக்கிக் கொண்டு தன்னறியாமலே கைகூப்பி நின்றான். "ஜெயி"லர்கள் வெளியே சென்றதும், மாதவனுக்குத் தன்னறியாமலே சோகம் அதிகரித்தது. கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகிற்று. விம்மி விம்மியழ ஆரம்பித்தான். பிரபு வெளிப்புறம் பார்த்துவிட்டு, மாதவனைத்தன் இடக்கையால் கட்டிக் கொண்டு, தன்கைக் குட்டையால் அவன் முகத்தைத் துடைத்து விட்டு, அடங்காத் துயரத்தால், தன் தைரியமான கண்களிலிருந்து ததளிக்கும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, மாதவனைத் தன் மடிமீது அமர்த்திக் கொண்டார்.

சிறிது நேரம் இருவரும் யாதொன்றும் ஸம்பாஷிக்க வாயெழாமல் சித்திரப் பதுமைகள் போல் ஸ்தப்தமாயிருந்தார்கள். கடைசியாய்,

ப்ரபு:—"மாதவ! என் கண்மணி!"

மாதவன்:—"ஸ்வாமி! "(விம்மி விம்மி யழுகின்றான்.)"

ப்ரபு:—"அப்பா! வியஸனப்படாதே யப்பா! அவனவன் செய்த வினையை அவனவனே அனுபவிக்க வேண்டும்."

மாதவன்:—"ஸ்வாமி! எல்லாவற்றையும் காக்க வல்ல ஈசன் ஒருவனுண்டென்று கேட்டிருக் கின்றேன். ஆனால் பாபியாகிய என்மீது மாத்திரம் அவருக்குக் கருணையில்லையே! ஸ்வாமி! இறப்பதைப்பற்றி எனக்குக் கொஞ்சமேனும் வருத்தமில்லை! ஆனால், (விம்மி விம்மி யழுதுகொண்டு) கொலைக்கேவிலே மரணதண்டனை

யடைந்து தூக்குமரம் சேரும்படி நேர்ந்த என் விதியைப்பற்றி நினைத்தால்—"

ப்ரபு:—"கண்மணி! நீ வருத்தப்படாதே! ஈசனிருக்கின்றார். நியாயமன்யாயம் அவருக்குத் தெரியும். நல்லகாலம் வந்தவுடன் இவை எல்லாம் ஆதவனைக் கண்ட பனிபோல் விலகிவிடும்."

மாதவன்:—"என் கஷ்டங்கள் என்மண்டையோடுதான் விலக வேண்டும். இனி என்ன விசாரம்!"

ப்ரபு:—"அப்பா மாதவ! வந்த கார்யத்தைக் கவனிப்போம், மலை யறுந்து மயிரிழையில் தொங்குவதுபோல் உன்னுயிருக்கு அனுவசியமாய், அநியாயமாய் ஆபத்து நேர்ந்திருக்கின்றது. அதினின்றும் தப்புவிக்க—"

மாதவன்:—"ஸ்வாமி! காட்டினில் படுகுழியில் வீழ்ந்து புலி வாயி லகப்படுந் தருணத்தில் தேனில் ஒரு சொட்டு விழுந்தால் இனிமை தருவதுபோல் இனிமையாயிருக்கின்றது தங்கள் வசனம். ஐயோ! என்மீது யாதொரு குற்றமுமில்லையென்று தாங்களாவது நினைக்கின்றீர்களே என்ற, ஸமாதானத்தோடாவது தூக்குமரம் செல்லுகின்றேன். ஸ்வாமி! என்னைத்தப்புவிக்க இனி ஈசனாலும் முடியாது. ஹைகோர்ட்டிலும் உறுதியாய் விட்டதாய்க் கேள்வி. அடியேன் மீது தேவரீர் இவ்வளவு சிரமப் பட்டும் வீணாக நேர்ந்தால்—ஆனால் தங்களை வனத்திற் கண்டது முதல், தாங்கள் என் மீது பாராட்டிவரும் அபிமானத்தையும், நான் ஏதோ எப்படியாவது கடைசியில் நல்ல ஸ்திதியில் இருப்பேன் என்று தாங்கள் கொண்டிருக்கும் தீர்மானத்தையும் கவனிக்க எனக்கு ஆச்சர்யமாய் இருக்கின்றது.

ப்ரபு:—"அப்பனே! எல்லாம் வல்ல ஈசனுடைய க்ருபை யொன்றிருக்குமாயின் இவ்வுலகில் அசாத்ய மென்பது மொன்றுண்டோ? இவ்வளவு கஷ்டங்களின் மத்தியில் எப்படியாவது எல்லாம் மங்களமாகவே முடியுமென்பது என் மனதில் தோன்றிக் கொண்டேயிருக்கின்றது."

மாதவன்:—"ஸ்வாமி! ஒருவன் ஒரு விஷயத்திலேயே அதிகமாய்ப் புத்தியை லயிக்கச்செய்தால், அவ்விஷயமானது ஸாத்யமானதாகவே காண்கின்றான். இததானே மனோலயம் (Fixed-ideas) என்ற நியாயம்? எப்பொழுதும் என் நன்மையையே கருதிக்கொண்டிருக்கும் தங்கள் மனதில் அதே ததாகாரமாய்த் தோன்றுகினறது. ஆனால்—"

ப்ரபு:—"மாதவ! அதிகமாய் இனிக் காலதாமதம் செய்வதிற் பயனில்லை. ஆகையால் உன்னிடம் சில ரகஸ்யங்கள் கேட்கவந்தேன். அதற்காகத்தான் இவ்வளவு வேஷம் எனக்கு"—

மாதவன்:—"ஸ்வாமி! "தாங்கள் எவ்வாறு இச்சிறைச்சாலைக்குட் புகுந்தீர்கள்? வெகு கண்டிப்பாய்க் காக்கப்பட்டிருக்கின்றதே!"

ப்ரபு:—"அப்பனே! மாதவ! அன்பினாலாகாததொன்றுண்டோ! கண்மணி! உன் ஆசையால், இவ்வாறெல்லாம் நான் செய்யத்துணிந்தேன். கண்ணே! என் நிஜ அழகைப்பார்த்தா என்னை உட்புகவிட்டான்? என் உடைகளின் கௌரவத்தால் அல்லவோ நான் உட்புக முடிந்தது? இரண்டரை ரூபாயல்லவோ இவ்வுடைகளுக்கு வாடகை. இன்றுமாலைக்குட் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும். வடக்கு வெளிவீதி வண்ணானிடமிருந்து இவை வாங்கப்பட்டன. யாரோ ஒருவக்கீல் உடைகளாம்.—"

மாதவன் இவ்வளவு கஷ்டங்களின் மத்தியில் கொஞ்சம் தானறியாமல் சிரித்துக்கொண்டான். இன்பமும் துன்பமும் உள்ளத்தமைப்பே! பிறகு சிறிது நேரம் மாதவனும் நமது பரதேசியாரும் பேசிக்கொண்டிருந்து பிறகு பரதேசியார் விடைபெற்று வெளியே சென்றார். (நமது பரதேசியார்தான் ப்ரபு வேடம்பூண்டவர் என்பதை நமது நண்பர்கள் நாம் கூறுமலே அறிந்து கொண்டிருப்பார்கள்.)

(இன்னும் வரும்)

R. S. நாராயணஸ்வாமி ஐயர், B. A., B. L.